# COVID-19 தடுப்பூசிகளைப் பற்றிய பொதுவான கரிசனைகள்

TAMIL

மார்ச் 2021 நிலைமைப்படி இதுவே மிக அண்மித்த தகவல், அத்துடன் தேவைக்கேற்ப இது புதுப்பிக்கப்படும். மருத்துவர்களால் இது மதிப்பாய்வு செய்யப்பட்டுள்ளதுடன் மருத்துவ ரீதியாகத் துல்லியமானதுமாகும்.

## பரீட்சார்த்தத் தடுப்பூசிப் பாதுகாப்பு

COVID-19 தடுப்பூசி ஆராய்ச்சிக்குப் பல்வேறு நாடுகளிலிருந்தும் பெருமளவான பணம் விரைவாகக் கிடைத்தது. **தடுப்பூசி தயாரிப்பதற்குரிய எந்த நடவடிக்கையும் தவிர்க்கப்படவில்லை.** COVID-19 பரீட்சார்த்தத் தடுப்பூசி **30,000** முதல் **45,000** பேருக்கு ஏற்றப்பட்டது. எனவே எம்மிடம் ஏராளமான தகவல்கள் உள்ளன.

## கருத்தரித்தல் மற்றும் குழந்தைகள்

**தடுப்பூசிகள் கருத்தரித்தலைப் பாதிக்காது.** தடுப்பூசி மூலம் தயாரிக்கப்பட்ட நோயெதிர்ப்பிகள் உங்கள் உடலை அல்ல, வைரஸையே தாக்குகின்றன. **இது எதிர்காலத்தில் கருவுறுதலைப் பாதிக்காது அல்லது கருச்சிதைவை ஏற்படுத்தாது** என்று COVID-19 தொற்று ஏற்பட்டவர்களிடமிருந்தும், கர்ப்பமாக **இருந்தவர்களிடமிருந்தும் பெற்றுக்கொண்ட தகவல்கள்**

## DNA மற்றும் mRNA இன் நேரெதிர்ப் பண்புகள்

**Pfizer-BioNTech (ஃபைசர்-பயோஎன்டெக்) மற்றும் Moderna (மொடர்னா) தடுப்பூசிகள் உங்கள் DNA யை மாற்றாது.** இந்தத் தடுப்பூசிகள் **messenger RNA (மெசஞ்சர் RNA - mRNA)** எனப்படும் ஒரு பொருளைப் பயன்படுத்துகின்றன. வைரஸில் காணப்படும் ஒரு புரதத்தை உருவாக்குவதற்கான வழிமுறைகளை mRNA கொண்டுள்ளது. இது நோயெதிர்ப்பிகளை உருவாக்கும்படி உங்கள் உடலை எச்சரிக்கின்றது, பின்னர் அவை இந்தப் புரதத்தைத் தாக்கி வைரஸைக் கொல்லும். இந்த நோயெதிர்ப்பிகள் நம் உடலில் தங்கியிருக்கும், ஆனால் **mRNA தங்கியிருப்பதில்லை**

## பக்க விளைவுகள்

தடுப்பூசிகளினால் **பெரும்பாலானவர்களுக்கு எவ்விதப் பக்க விளைவுகளும் ஏற்படுவதில்லை.** சிலருக்கு ஊசி போடப்படும் இடத்தில் வலி, சோர்வு, தலைவலி, தசை/ மூட்டு வலி, காய்ச்சல் அல்லது குளிருணர்ச்சி (பிற தடுப்பூசிகளுக்கு ஏற்படுவது போல) இருக்கும். மிகச் சிலருக்கு ஒவ்வாமைக்கான எதிர்விளைவு ஒன்று ஏற்படலாம். **பிற பக்க விளைவுகள் அரிதானவை; கனடாவின் சுகாதார அமைப்பு எந்தவொரு நீண்ட-காலப் பக்க விளைவுகளையும் சோதித்துக்கொண்டே இருக்கும்.**

## முகக்கவசங்களைத் தொடர்ந்து அணிந்து கொள்ளவும்

**தடுப்பூசி பெற்ற பின்னரும் கூட நீங்கள் தொடர்ந்து முகக்கவசம் அணிவதுடன் சமூக இடைவெளி தூரத்தையும் கடைப்பிடிக்க வேண்டும்.** தடுப்பூசி பெற்ற பின்னரும் கூட COVID-19 இனால் உங்களுக்கு நோயேற்படவும் அல்லது மற்றவர்களுக்கு COVID-19 தொற்றை ஏற்படுத்தவும் ஒரு சிறிதளவு வாய்ப்பு உள்ளது

## microchip (மைக்ரோசிப்) இல்லை

**தடுப்பூசிகள் நம் உடலில் ஒரு chip ஐப் போடுவதில்லை**
தடுப்பூசிகளில் சிறிய கணினிகள், மைக்ரோசிப்கள் அல்லது கண்காணிப்பு சாதனங்கள் என எதுவும் இல்லை. **அவைகளால் மக்களைக் கண்காணிக்கவோ அல்லது தடுப்பூசி பெற்ற ஒருவரைப் பற்றிய தனிப்பட்ட தகவல்களைப் பெறவோ முடியாது.**

## மூலப்பொருட்கள்

தடுப்பூசிகளில் உள்ள மூலப்பொருட்கள் பாதுகாப்பானவை – **குருதிப் பதார்த்தங்கள், பாதரசம், கருக்கலங்கள், பன்றி இறைச்சி, விலங்குப் பதார்த்தங்கள், அலுமினியம் அல்லது formaldehyde (ஃபார்மால்டிஹைட்) என எதுவும் அவற்றில் இல்லை**

## முன்னர் ஏற்பட்ட COVID-19 தொற்று

**உங்களுக்கு COVID-19 தொற்று முன்னர் ஏற்பட்டிருந்தாலும் கூட நீங்கள் தடுப்பூசி பெற வேண்டும்.** COVID-19 இனால் நீங்கள் மீண்டும் நோய்க்குள்ளாகலாம், ஏனெனில் ஒரு நோய்த்தொற்றுக்குப் பின்னர் எவ்வளவு காலத்துக்கு நோயெதிர்ப்பிகள் உங்களில் இருக்கும் என்பது எங்களுக்குத் தெரியாது.

நீங்கள் படித்ததைக் குறித்து உங்களுக்குச் சரியாகத் தெரியாவிட்டால், உங்கள் குடும்ப மருத்துவர் அல்லது மருத்துவத் தாதியிடம் விசாரித்தறியவும். **மேலதிகத் தகவலுக்குப் பின்வரும் பொது சுகாதார இணையத்தளங்களையும் நீங்கள் பார்வையிடலாம்:**

1. https://covid-19.ontario.ca/covid-19-vaccines-ontario
2. https://www.canada.ca/en/public-health/services/diseases/coronavirus-diseasecovid-19/vaccines.html